11.11.2025 O.S 311/2020 வா.சா1 குளத்தூரான்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். நான் கணக்கபிள்ளைவலசை கிராம நாடார் சமுதாயத்திற்கு தலைவர் என்பதையும், மற்ற வாதிகள் செயலாளர் மற்றும் பொருளாளர் என்பதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். எங்களது சமுதாய நிர்வாகிகள் அனைவரும் கூட்டம் கூடி தேர்வு செய்வார்கள் என்றால் சரிதான். தீர்மானம் எழுதுவார்கள் என்றால் தீர்மானம் எழுதுவது இல்லை. நான் தேர்வு செய்யப்பட்ட நிர்வாக என்பதற்கு எழுத்துபூர்வமான ஆவணம் உண்டா என்றால் இல்லை. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம் செய்கிறேன். எங்கள் ஊரில் இந்து நாடார், கிறிஸ்தவ நாடார் என்ற இரண்டு பிரிவுகள் உண்டு என்றால் இருதரப்பினர்களும் உள்ளார்கள். நான் இந்து நாடாரின் பிரதிநிதி என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்வாகிகள் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். தற்போது யார் தலைவர் என்றால் சுப்பையா ஆவார். நான் தற்போது நிர்வாகி இல்லை என்றால் சரிதான். 1ம் லக்க கோயில் எங்களது சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ1 ஆவணமானது வழக்கு 1ம் லக்க சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆவணத்தில் சர்க்கார் புறம்போக்கு என்றும், எனது சமுதாயத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1ம்லக்க சொத்து சமுதாய கோயில் என கூறுவது பொய் என்றால் சரியல்ல. கோயிலுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை

திருவிழா நடைபெறும் என்றால் சரிதான். அருகில் உள்ள புல்லுக்காட்டுவலசை, குத்துக்கல்வலகச, கணக்கபிள்ளைவலசை, பெரியபிள்ளைவலசை, வல்லம் ஆகிய ஊர்களில்உள்ள நாடார்கள் அனைவரும் வரி கொடுப்பார்கள் என்றால் இல்லை. நன்கொடை கொடுப்பார்கள். அவ்வாறு நன்கொடை மற்றும் வரி செலுத்தினார்கள் என்பதற்கான ஆவணம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் யார் யார் வாரி கொடுத்தார்கள் என்ற விபரம். அதை தாக்கல் செய்தால் அந்த கோயிலில் அவர்களும் உரிமைதாரர்கள் என்பது தெரிந்துவிடும் என்பதால் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 ஆன 16.10.1940 என்ற ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ 2 ஆவணத்தின் அசல் எங்களிடம் இல்லை. அதை எழுதி கொடுத்த நபரிடம் அசல் உள்ளது. வா.சா.ஆ 2 ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் பரிகாரம் கோருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தை புல்லுகாட்டுவலசையை சேர்ந்த ராமசாமி நாடார், குளத்தூர் நாடார் ஆகியோர்கள் எழுதி வைத்தார்கள். அந்த இருவரும் எப்போது இறந்தார்கள் என்றால் தெரியாது. அவர்களின் வாரிசு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த எழுதி கொடுத்த நபர்கள் இருவரும் உயிருடன் இருக்கும்வரை வா.சா.ஆ 2ல் கண்ட சொத்து அவர்களது வசம் இருந்தது என்றால் சரிதான். அந்த இருவரும் கோவிலில் கட்டளை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். இந்த சொத்தானது சில்லரபுரவு கிராமத்தில் உள்ளது. சில்லரபுரவு கிராமத்திற்கும், வழக்கு சொத்திற்கும் இடையே 1/2 கி.மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. 2 கி.மீட்டர் தூரம் இருக்கும். எனதுஊரான கணக்குபிள்ளைவலசை செங்கோட்டை

தாலுகாவில் உள்ளது. அந்த சொத்தானது தென்காசி தாலுகாவில் உள்ளது. கணக்குபிள்ளைவலசைக்கும், சில்லரைபுரவு ஊருக்கும் சுமார் 10 கி.மீட்டர்இருக்கும் என்றால் இருக்கும். சொத்தானது தற்போதும் பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் இல்லை. வழக்கு சொத்து கோவிலானது எப்போது எங்களது அனுபவத்திற்கு வந்தது என குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு 2 ம் லக்க சொத்தானது எப்போதும் எங்களுடைய நிர்வாகத்திற்கு வந்தது இல்லை என்றால் சரியல்ல. 2017 ம் ஆண்டு தரைவாடகைக்கு கொடுத்தோம். தற்போது கட்டளை பணிகளை பிரதிவாதிகள் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. வா.சா.ஆ 2 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள கட்டளை பணிகளை நாங்கள் செய்து வருவதாக வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் நாங்கள் தான் கட்டளை பணி செய்து வருகிறோம். நான் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதில் பட்டா எண் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 ஆவணமானது வேறு சொத்திற்கு செலுத்தப்பட்டது என்றும், பட்டா எண் திருத்தப்பட்டுள்ளது என்றால்சரியல்ல. 2 ம்லக்க சொத்திற்கு தீர்வை ரூ.2.40 பைசா என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தில் ரூ.50/-செலுத்தப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ஆவணத்தை கிராம நிர்வாக அலுவலர் கொடுத்தார். வா.சா.ஆ 3 ஆவணத்தில் பணம் செலுத்துபவரின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். அதனால் அதனை நாங்கள் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 4 மின் கட்டண ரசீதுகளில் எங்களது சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் கோயில் இடத்து பெயர் சொல்லப்பட்டுள்ளது. அந்த மின் கட்டணமானது தமிழ்நாடு

மெர்க்கண்டைல் வங்கி மூலம் ஆன்–லைன் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ரசீதுகளானது நெட் சென்டரில் செலுத்தப்பட்டுள்ளதால் அவர்கள் பெயர் உள்ளது. ஆன்–லைன் மூலம் யார் வேண்டுமானாலும் மின்கட்டணம் செலுத்தலாம் என்றால் சரிதான். இந்தமின்கட்டணத்தை நாங்கள் தான் செலுத்தினோம். இந்த மின்கட்டணம் நிர்வாகி என்ற முறையில் செலுத்தவில்லை வழக்கிற்காக செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கோவிலில் மாமரம், தென்னை மரங்கள் இல்லை என்றால் சரிதான். ஒரு வேம்பு மட்டும் உள்ளது. வழக்கு 1ம் லக்க சொத்தில் உள்ள மாமரம், தென்னை மரங்களை குத்தகைக்கு விட்டு கோவிலை பராமரிப்பதாக சொல்லியிருப்பது பொய் என்றால் கோவிலுக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்களில் மரங்கள் உள்ளது அதை குத்தகைக்கு விட்டு கோவிலை பராமரிக்கிறோம். கோவிலுக்கு பாத்தியப்பட்ட வேறு சொத்துக்களை இந்த வழக்கில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தில் உள்ள அழைப்பிதழ்களில் நிர்வாகிகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1வது அழைப்பிதழில் எங்களது சமுதாயத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 1வது அழைப்பிதழ் கும்பாபிஷேகத்திற்கு அச்சடிக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம்லக்க சொத்து எங்களது சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் அதற்கு நாங்கள் நிர்வாகிகள் என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 2வது அழைப்பிதழிலும் அவ்வாறு எங்களது சமுதாய பெயர், நிர்வாகிகள் பெயர் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என் முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 8ல் 2ம்லக்க சொத்தை வாடகைக்கு விட்டு வருமானம் பெற்று வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான

ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். அந்த 2 லக்க சொத்தை பொறுத்து 3 வருடத்திற்கு சேர்த்து ரூ.1,50,000/-க்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அந்த வாடகையை ரொக்கமாக தான் வாங்கினோம். அவ்வாறு வாங்கியிருந்தால் கோவில் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் சொல்லியுள்ள நிறுவனமானது பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். அந்த நிறுவனமானது ரூ.20 ஆயிரத்திற்கு மேல் ரொக்க பரிவர்த்தனை செய்ய முடியாது என்றும், வங்கி மூலமாக தான் பரிவர்த்தனை செய்யும் என்றால் சரியல்ல. வழக்கு 2 ம்லக்க சொத்தை வாடகைக்கு விட்டு வருமானம் பெற்றுவருவதாக பொய் என்றும் அதனால் தான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அந்த நிறுவனத்தின் நிர்வாகி எங்களது தரப்பில் சாட்சியம் அளிக்க தயாராக உள்ளார். 2 ம்லக்க சொத்து பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றும்,. எங்களது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. 2 ம்தபசில் சொத்து தரிசுநிலம் என்றால் சரிதான். கருவேலமுட்கள் உள்ளது. 1 முதல் 3 பிரதிவாதிகள் வா.சா.ஆ 1 ஆவணத்தை எழுதி வைத்த நபர்களின் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் தெரியாது. எழுதிவைத்த நபர்கள் இறந்துவிட்ட பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகள் கட்டளையை தொடர்ந்து நடத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு 2 ம் லக்க சொத்தில் போதிய வருமானம் இல்லாததால் 1 முதல் 3 பிரதிவாதிகள் 2 ம்லக்க சொத்தினை 4 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து அந்த தொகையை வைப்பீடு செய்து அந்த தொகையில் இருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்து வா.சா.ஆ 2 ல்சொல்லப்பட்டுள்ள கட்டளை பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

நான் கோவில் நிர்வாகி இல்லை என்பதால் மேற்படி விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. வழக்கு 2 ம் லக்க சொத்தில் எனக்கோ,. எனது சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும், அனுபவத்திலும் இல்லை என்றால் 2017 ் ஆண்டு முதல் 2020 ம் ஆண்டு வரை இருந்தது. வழக்கு சொத்தில் உரிமையும், அனுபவமும் இல்லாதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.